# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM.

S.C.No.217/2022

Deposition of witness – PW15

| | | | |
|---|---|---|---|
| Name | : ஈஸ்வரன் | Caste | : |
| S/o. | : சித்தன் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed on 19.02.2026 in accordance with the provisions of Oaths Act No.44 of 1969.

Accused present.

முதல் விசாரணை :

நான் தற்போது மேட்டுர் நெடுஞ்சாலை ரோந்து பிரிவில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 06.03.2022ம் தேதி தேவூர் காவல்நிலையத்தில் அலுவலில் இருந்தபோது தேவூர் காவல்நிலைய குற்ற எண்.21/2022 பிரிவு 302 இதச வழக்கின் முதல் தகவல் அறிக்கையை காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் பதிவு செய்து அந்த முதல் தகவல் அறிக்கையுடன் வாதியின் புகார் மனுவுடன் துரித தபால் அலுவலாக கடவு சீட்டு தபாலில் கொடுத்து

சங்ககிரி கனம் நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்திற்கு இரவு 2.00 மணிக்கு அனுப்பி வைத்தார். முதல் தகவல் அறிக்கையை இரவு 2.45மணிக்கு நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்தில் ஒப்படைத்து பின்னர் நகல்களை சங்ககிரி காவல் துணை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் ஒப்படைத்து, பின்னர் சேலம் தனி பிரிவு காவல் ஆய்வாளர் அலுவலகத்திலும், டிசிஆர்பி அலுவலகத்திலும் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திலும் ஒப்படைத்து சான்று பெற்று நிலையம் வந்து அறிக்கை செய்தேன். இது குறித்து சங்ககிரி வட்ட காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

05.03.2022ம் தேதி காவல் நிலையத்தில் யார் யார் இரவு பணியில் இருந்தார்கள் என்றால் தெரியவில்லை. ஆனால் நான் நிலையத்தில் இருந்தேன். யார் யாருக்கு முதல் தகவல் அறிக்கையை கொடுத்தேன் என்றால் சங்ககிரி நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றம், சங்ககிரி காவல் துணை கண்காணிப்பாளர் அலுவலகம், சேலம் தனிபிரிவு காவல் ஆய்வாளர் அலுவலகம், சேலம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகம், சேலம் டிசிஆர்பி அலுவலகம் ஆகியவற்றில் ஒப்படைத்தேன்.

எங்கே வைத்து எத்தனை மணிக்கு உயர் அதிகாரிகளுக்கு முதல் தகவல் அறிக்கை கொடுத்தேன் என்றால் தற்போது ஞாபகமில்லை. காவல்நிலையத்தில் நான் எத்தனை மணிக்கு அறிக்கை செய்தேன் என்றால் நீதிமன்றத்தில் முதல் தகவல் அறிக்கை கொடுத்துவிட்டு,

06.03.2022ம் தேதி  தேவூர் காவல்நிலையத்தில் காலை 7.00 மணிக்கு காவல் உதவி ஆய்வாளரிடம் அறிக்கை செய்தேன்.

மறுவிசாரணை இல்லை.

Sd/– S.Sumathy,
Principal Sessions Judge, Salem.